# பொதுக்காலம் 14ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் 14ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில், இயேசுவின் ஞானத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தாலும், என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்? இவர் தச்சர் அல்லவா? மரியாவின் மகன்தானே!" என இயேசுவின் குடும்பச் சூழ்நிலையை, அவரின் வாழ்க்கைப் பின்னணியைப் பற்றி விமர்சிக்கின்றனர். இன்று நாமும், பத்தாம் மற்றும் தேர்வு முடிவுகள் வெளியானதும், "கூலித் தாழிலாளியின் மகன்; மாநிலத்தில் முதலிடம், செருப்புத் தைப்பவரின் மகள் மாவட்டத்தில் முதலிடம்" என அவர்கள் குடும்பச் சூழ்நிலையை முன்னிறுத்துகின்றோம். அவர்களின் குடும்பச் சூழ்நிலை, அவர்களின் வாழ்க்கைப் பின்னணி எப்படிப்பட்டதாக இருந்தாலும், அந்த மாணவர்களின் முயற்சிகளை, திறமையை, பொறுப்புணர்வை, ஈடுபாடு, கடின உழைப்பு இவைதான் அவர்களுக்கு வெற்றியை கொடுத்துள்ளது என்பதை நாம் மறுக்க இயலாது. ஆனால், நாம் பிறரது திறமைகளை, அவர்களின் கடின உழைப்பை ஓரங்கட்டிவிட்டு, அவர்களை விமர்சனம் செய்து ஏற்கத் தயங்குகிறோம்.

"திருமுழுக்கு யோவான் வந்தபோது, அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. மக்கள் அவரை பேய்பிடித்தவன்" என்றனர். மானிடமகன் வந்துள்ளார், அவர் உண்கிறார், குடிக்கிறார், இவர்களோ, இம்மனிதன் பெருந்தீனிக்காரன், குடிகாரன், பாவிகளுக்கும், வரிதண்டுபவர்களுக்கும் நண்பன்" என்கிறார்கள். (மத்,11:19) இந்த உலகம் எப்படி இருந்தாலும் குறை கூறிக்கொண்டேதான் இருக்கும். "வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும், வையகம் இதுதானடா" என்கிறார் கவிஞர்; ஒருவர். ஆம், ஒருவர் முன்னேறினால் பொறாமையால் விமர்சித்து குறை கூறுவார்கள். வாழ்வில் தாழ்ந்து போனால், மட்டம் தட்டி விமர்சிப்பார்கள். ஒவ்வொருவர் வாயில் ஒரு நாக்கு என்றால், உலகின் வாயில் "இரட்டை நாக்கு". அப்படி இருந்தாலும் தப்பு, இப்படி இருந்தாலும் தப்பு" என விமர்சனம் செய்து, நம்மை ஏற்றுக் கொள்ளத் தயங்கும். நம்மை புடமிட்டுப் பார்க்கும். தரமற்ற விமர்சனங்கள், தகுதியற்றவர்களின் விமர்சனங்களை நாம் பொருட்படுத்தாது, முடங்கிவிடாது, "போற்றுவார் போற்றலும், தூற்றுவார் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல" (02.கொரி.06;:08) என்ற புனித பவுலின் வார்த்தைகளுக்கேற்ப, நம் வாழ்வைத் தொடர வேண்டும். நம் பொறுப்பு, கடமைகள், திறமைகளிலிருந்து பின்வாங்காது, முன்னேற்றப்பாதை நோக்கி வாழ்வைத் தொடர்வோம். உலகின் வாயைத் தைத்திடு, அல்லது உன் செவிகளை இறுக்கி மூடிடு". உலகின் வாயைத் தைப்பது கடினம், நம் செவியை மூடுதல் சுலபம்" என்கிறார் கவிஞர் ஒருவர். நம்மை நோக்கி வீசப்படும் கற்களை, படிக்கட்டுக்களாக மாற்றி, முன்னேறிச் செல்வோம். பிறரை விமர்சனம் செய்யாது, அவர்களின் திறமைகள், ஆற்றல்களை அங்கீகரித்து வாழ இறையருள் வேண்டி, இத்தெய்வீக திருப்பலியில் சங்கமிப்போம். ஆசி பெறுவோம். நலம் நல்குவோம்.

## முதல் வாசக முன்னுரை: எசேக்கியேல் 2:2-5

அன்பர்களே, இன்றைய முதல் வாசகம், எசேக்கியேல் இறைவாக்கினரை ஆண்டவர் இஸ்ரயேல் மக்களிடம் அனுப்பிய நிகழ்வை எடுத்துரைக்கிறது. இஸ்ரயேலர் பலர் கடவுளின் பெயரால் வந்த இறைவாக்கினர்களை ஏற்றுக்கொள்ள மனம் இல்லாதவர்களாக இருந்ததை இதில் காண்கிறோம். நாம் இறைவனின் பணியாளர்களை ஏற்றுக்கொள்ளும் மனதுள்ளவர்களாக வாழ வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 2 கொரிந்தியர் 12:7-10

அன்பர்களே, இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், தனது வலுவின்மையில் கடவுளின் வல்லமையைக் காண்பதாக எடுத்துரைக்கிறார். ஆண்டவரின் வெளிப்பாடுகளால் இறுமாப்பு அடையாமல் இருக்குமாறு தனக்கு இந்த துன்பம் வழங்கப்பட்டிருப்பதாக அவர் ஏற்றுக்கொள்கிறார். புனித பவுலைப் போன்று நமது வாழ்வில் வரும் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

“என் பார்வையில் நீ விலையேறப் பெற்றவன், மதிப்பு மிக்கவன், நான் உன்மேல் அன்பு கூர்கிறேன்” என்ற இறைவா,

இந்த உலகம் பிறர் வாழ்வை எப்போதும் விமர்சனம் செய்து, குறை கூறி அவர்களின் திறமைகள், ஆற்றல்கள் இவற்றை ஏற்றுக் கொள்ளாது, கீழே வீழ்த்த முற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களின் விமர்சனங்கள், ஏற்றுக் கொள்ளாத நிலையில் மனம் சோர்ந்து, தளர்ந்திடாது, திறமைகள், உழைப்பை முடக்கி விடாது, எத்தகைய நிலையிலும் முன்னேற்றப் பாதையிலிருந்து விலகிடாது, அவர்களின் தரமற்ற விமர்சனங்களை புறம் தள்ளி, இந்த உலகம் ஒதுக்கினாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், நாங்கள் உமது பார்வையில் மதிப்புக்குரியவர்களாக இருக்கிறோம் என்ற உள்ளார்ந்த நிறைவுடன், வாழ்வின் கடமைகளை, பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றக்கூடிய, இலட்சியங்களில் தொடர்ந்து பயணிக்கக்கூடிய திடமான, வலிமையான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

“தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல், நான் உங்களைத் தேற்றுவேன்” என்ற இறைவா,

வாழ்வில் ஆதரவற்று, துணையின்றி, ஆறதலின்றி தவிக்கும் மாந்தர்களை, அவர்களின் மனத் துயரை, மனப்பாரங்களை, கண்ணீரை கண்ணோக்கும். அவர்களின் மனத்துயரை மாற்றிட, உடனிருந்து ஆறுதல், அன்பை அளித்து, அவர்களை ஊக்கப்படுத்தி, அவர்களைத் தேற்றி, அவர்கள் வாழ்வு ஏற்றம் கண்டிடும் வகையில், அவர்கள் மகிழ்வில் உம்மைக் காணும் மாந்தர்களாக நாங்கள் வாழ்ந்திடக் கூடிய, நல்இதயத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

“வலிமை உடையவரைவிடப் பொறுமை உடையவரே மேலானவர்” என்ற இறைவா,

முப்பத்தெட்டு ஆண்டுகளாக குளத்தில் இறக்கிவிட ஆளின்றி, எத்துணை பொறுமையோடு காத்திருந்திருந்த, மனிதருக்கு நீர்; சுகம் தந்து வாழ்வு கொடுத்தீர், பதினெட்டு ஆண்டுகளாக தீய ஆவி பிடித்து, கூன் விழுந்து உடல்நலம் குன்றிய பெண்ணைக் குணப்படுத்தினீர். இவர்களின் பொறுமை இன்று எங்களிடம் காணாமற் போய்விட்டது. இன்று மாந்தர்களிடம் இல்லாத ஒரு “மை”யாக பொறுமை வலம் வருகிறது. எதையும்; காத்திருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு, பொறுமையில்லாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உடன் வாழும் மாந்தரிடமும், பணித்தளத்திலும், எங்கள் விசுவாச வாழ்விலும் பொறுமையிழந்து, எரிச்சல்பட்டு, நிம்மதியின்றி வாழும் மனநிலையை மாற்றி, பொறுமை என்னும் உன்னத பண்பினைப் பெற்று, வாழ்ந்திட, வரமருள, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

“கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” என்ற இறைவா,

உம் திருமுன்னிலையில் இணைந்த இதயங்கள், தற்போது சில ஆண்டுகளிலே, ஏன் சில மாதங்களில், நாட்களில் கூட நீதிமன்றத்தின் முன் நீதிபதியின் முன்னிலையில் பிரிந்து செல்லும் அவலநிலை வேகமாக அரங்கேறிக் கொண்டு வருகிறது. இன்று, கணவன், மனைவியிடம், விட்டுக் கொடுத்து செல்லாத நிலை, புரிந்து கொள்ளாத நிலை, நீயா நானா என்ற மனநிலை மேலோங்கி நிற்பதால், விவாகரத்துக்கள், விரைவாக உறவை விடைபெறச் செய்கின்றது. இத்தகைய தவறான மனநிலைகளை மாற்றி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, புரிந்து கொண்டு, உம் முன்னிலையில் கொடுத்த வாக்குறுதியை இறுதிவரை காப்பாற்றுபவர்களாக, தங்கள் இல்லற வாழ்வைத் தொடர்ந்திடக் கூடிய பிரமாணிக்கமான மனதினை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

“ஒரு சொல் ஒரு கொடையை விட மேலானது” என்ற இறைவா,

நாங்கள் பேசுகின்ற வார்த்தைகள், பலரை காயப்படுத்துவதாக, வீழ்த்துவதாக, கண்ணீரில் ஆழ்த்துவதாக அமையாமல், பலரும் பயன்பெறக்கூடிய பண்பான, கனிவான, ஊக்கம் தரக்கூடியதான வார்த்தைகளாக அமைந்திடவும், எங்கள் வீண் வார்த்;தை ஒவ்வொன்றுக்கும் நாங்கள் கணக்கு கொடுக்கும் வேண்டுமென்பதை உணர்ந்தவர்களாக, தவறான வார்ததைகளை பேசாமல், எங்கள் நாவைக் காத்துக் கொள்ளவும், இனிய சொற்களால், பல இதயங்களை இதமாக்கி, இன்பத்தை கொடுக்கவும், தேவையற்ற வார்த்தைகளை தவிர்க்கவும், எங்கள் நாவினை பயன்படுத்திட ஆற்றல் தந்தருள வேண்டுமென்று, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.